**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C - 455/2022**

**Deposition of Witness for Prosecution : P.W.2**

| | | | |
|---|---|---|---|
| Name | : **பாண்டியம்மாள்** | Caste | : |
| Father/Husband Name | : **மதுரைவீரன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(A2, A4, A10 present. All other Accused Absent. Petition filed and Allowed)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 14.03.2025**

**முதல் விசாரணை**

1. சம்பவ தினந்தன்று கடப்பாறையை வைத்து எதிரி செல்வம் மற்றும் மாரிமுத்து ஆகியோர் கடையை உடைத்தார்கள். நான் சென்றுகேட்டபோது எல்லாரும் என்னை தேவுடியா, அவுசாரி என்று திட்டினார்கள். நான் எனது செல்போனில் புகைப்படம் எடுத்தேன். கடையில் இருந்த Water Wash Machine, கிரீஸ் அடிக்கும் மிசின் ஆகியவற்றை எதிரி செல்வம் மற்றும் மாரிமுத்து அடித்து சேதப்படுத்தினார்கள்.

2. கடையில் இருந்த ஆவணங்கள், பணம் மற்றும் பொருட்கள், வெளியில் இருந்த பேனர் ஆகியவற்றை வெண்ணிலா, ரதிபாப்பா, பூங்கொடி, தவமணி, பொம்மி, சுமதி ஆகியோர் தீ வைத்தார்கள், மற்ற பொருட்ளை TATA Ace வாகனத்தில் ஏற்றினார்கள். நான் நடந்த விபரத்தை நான் எனது மகனிடம் சொன்னேன். அவர் வழக்கு போடுவோம் என்று என்னிடம்

சொன்னார். மேற்படி வண்டியை எதிரி திருப்பதி ஓட்டிசென்றார். எங்கள் கடையை எதிரி ஒய்யனன் தீ வைத்தார். பின்னர் கடையை எதிரி ஒய்யனன் மற்றும் திருப்பதி வெள்ளையடித்து தங்கள் வசம் வைத்துகொண்டனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. இரண்டாவது எதிரி எனது அப்பா ஆவார். மற்ற எதிரிகள் என்னுடன் பிறந்த சகோதரன்கள், அவர்களின் மனைவிகள் மற்றும் குழந்தைகள் ஆவார். நான் 6 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு படிக்க தெரியும், எழுத தெரியாது. எனது மகன் அழகுமணி கோயம்புத்தூரில் வழக்கறிஞராக பணிபுரிந்து வருகிறார். இன்னொரு மகன் ஜெயராமன் நீதிமன்றத்தில் ஊழியராக பணியாற்றி வருகிறார் என்றால் சரிதான். மேற்படி ஜெயராமன் என்பவர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கின் புகார்தாரர் ராமகிருஷ்ணன் என்னுடைய மகன் என்றால் சரிதான்.

2. நான் முதல் விசாரணையில் சொன்ன ஒர்க் ஷாப் கடை எனது தந்தை 2வது எதிரிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த கடையை சுற்றிலும் நிறைய கடைகள் உள்ளது. மேற்படி கடைகள் எழுமலை போகும் பிரதான சாலையில் உள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.1 ஒத்தி ஆவணத்தின் அடிப்படையில்தான் எனது மகன் அ.சா.1 ராமகிருஷ்ணன் மேற்படி ஒர்க் ஷாப்பை நடத்தி வந்தார் என்றால் சரிதான். மேற்படி ஒத்தி பத்திரம் எழுதும்போது எங்களுக்கும் எதிரிகளுக்கும் எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். மேற்படி ஒத்தி பத்திரம் 50 ரூபாய் பத்திரத்தில் எழுதப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பத்திரம் எனது மகன் ராமகிருஷ்ணன் பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பத்திரம்

பதியவில்லை என்றால் சரிதான். அதில் சாட்சியாக நானும், வாசிமலையின் மகன் விஜயகுமாரும் கையெழுத்து போட்டுள்ளோம். மேற்படி பத்திரத்தில் எனது பெயரருக்கு கீழ் எனது கணவர் பெயர் மற்றும் முகவரி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஒத்தி பத்திரம் பதிவு செய்யபடாதததால் அது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. மேற்படி ஒத்தி பத்திரம் எழுதியது எனது மகன் வழக்கறிஞர் அழகுமணிக்கு தெரியும். ஒத்தி பணத்தை எனது மகன் ராமகிருஷ்ணன் கொடுத்தார். பணம் கொடுக்கும்போது சாட்சிகள் யாரும் இல்லை.

3. எனது மகன் 2வது எதிரியிடம் பேரன் என்ற முறையில் வங்கியில் கடன் வாங்குவதற்காக Surety–காக 2வது எதிரியிடம் கையெழுத்து பெற்றார் என்றால் சரியல்ல. அவ்வாறு நம்பிக்கையின்பேரில் 2வது எதிரி Surety– காக போட்ட கையெழுத்தை வைத்து மோசடியாக மேற்படி ஒத்தி பத்திரத்தை தயாரித்துள்ளோம் என்றால் சரியல்ல. அதனால்தான் மேற்படி பத்திரத்தை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி எங்கள் கடைக்கு அருகே உள்ள நடைபாதை எனது அப்பா 2வது எதிரிக்கு பாத்தியப்பட்டது. அதற்கு அருகில் எங்களது பூர்வீக நிலம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி நடைபாதையை எனது அப்பாவிடம் கேட்டு தரவில்லை என்பதால் பேரையூர் நீதிமன்றத்தில் வழக்கு போட்டோம் என்றால் சரிதான். மேற்படி ஒர்க் ஷாப் தற்பொழுது எதிரிகளின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான்.

4. பேரையூர் நீதிமன்றத்தில் உரிமையியல் வழக்கு பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் வாதி எனது கணவர் ஆவார். சம்பவ இடத்திலிருந்து எழுமலை காவல் நிலையம் 2 கி.மீ துரம் இருக்குமா என்றால் இருக்கும். 22.09.2019 ஆம் தேதியில் மதியம் 02.00 மணியளவில் சம்பவம்

நடந்தது. சம்பவ இடத்திலிருந்து எங்களது வீடு 10 அடி இருக்கும். சம்பவ நடந்தபோது நான் தற்செயலாக போனேன். புகார்தாரர் ராமகிருஷ்ணன் மருத்துவமனையில் இருந்தார். சம்பவம் நடந்தபோது எனது மகன்கள் இருவருக்கும் நான் அலைப்பேசியில் அழைக்கவில்லை. உண்மையிலேயே சம்பவம் நடந்திருந்தால் எனது மகன்களுக்கு நான் அலைப்பேசியில் அழைத்திருப்பேன் என்றால் சரியல்ல. புகார் நான் கொடுக்கவில்லை. சம்பவம் நடந்தபோது யார் யார் என்ன என்ன ஆயுதங்கள் வைத்திருந்தார்கள் என்றால் செல்வம் கடப்பாறையை வைத்திருந்தார், மாரிமுத்து கம்பி வைத்திருந்தார், மற்ற எதிரிகள் குச்சி மற்றும் கல் வைத்திருந்தார்கள். எதிரிகள் செல்வம் மற்றும் மாரிமுத்து அசிங்கமாக பேசினார்கள்.

5. கடைக்கு தீ வைத்தவுடன் தீயணைப்பு வாகனத்திற்கு தகவல் கொடுத்தேனா என்றால் இல்லை. தீயினால் கடைக்கு சேதம் அடைந்ததா என்றால் இல்லை. கடையில் இருந்த Pass Book, தபால் நிலைய ஆவணங்கள், வங்கி கடன் ஆவணங்கள் ஆகியவை இருந்தன. மேற்படி எரிந்துபோன ஆவணங்களுக்கு புதிய ஆவணங்கள் வாங்கிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்கவில்லை, அதனால்தான் நீதிமன்றத்தில் வழக்கு போட்டோம். TATA Ace வாகனம் மேற்படி எதிரி திருப்பதிக்கு பாத்தியப்பட்டது. நான் சொன்னதுபோல் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நான் சம்பவ இடத்திலேயே இல்லை என்றாலும் சரியல்ல. இதே சம்பவத்திற்காக எனது மகன் எதிரிகள் மீது கொடுத்த பொய் புகாரில் எழுமலை காவல் நிலைய குற்ற எண் 252/2019– ஆக பதிவு செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் CC 74/2020 ஆக நிலுவையில்

உள்ளது என்றால் சரியல்ல. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் புகார்தாரர் ராமகிருஷ்ணன், இன்னொருமகன் அழகுமணி, நான் மற்றும் எனது கணவர் மதுரைவீரன், இன்னொருமகன் ஜெயராமன் எதிரிகளை தாக்கியதாக எதிரிகள் கொடுத்த புகாரில் IPC 323, 324, 506(ii), 294(b) and Sec. 4 of TNPHW Actபடி வழக்கு பதிவு செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் CC 135/20220 ஆக வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. அதேபோல் CC 182/2023 என்னுடைய மகன்கள் ராமகிருஷ்ணன், அழகுமணி, எனது கணவரின் அண்ணன் முனியாண்டி ஆகியோர் எதிரிகளை தாக்கியதாக அவர்கள் மீது இதச பிரிவுகள் 147, 148, 323, 324, 506(ii) படி வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் வழக்கு நிலுவையில் உள்ளது.

6. நான் எனது மகன்கள் எனது கணவர் ஆகியோர் எதிரிகளை தாக்கிவிட்டு, அதிலிருந்து தப்பிப்பதற்காக எதிரிகள் மீது பொய்புகார் கொடுத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் தரப்பில் தாக்கல் செய்த புகைப்படம் சட்டப்படி செல்லாது என்றாலும் வேறு இடத்தில் எடுத்த புகைப்படத்தை மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி புகைப்படங்கள் நான் சொன்னதுபோல் தீ எரிந்ததற்கான அறிகுறிகள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே இதே சம்பவத்திற்காக புகார் கொடுத்து, வழக்கு நிலுவையில் உள்ளபோது, இந்த தனிபுகார் சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. எதிரிகள் எங்கள் மீது கொடுத்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக எங்கையோ எடுத்த புகைப்படத்தை வைத்து, எனது மகனுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.